வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேனி பழனி

தேதி : 23.04.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- கடந்த 10 ஆண்டுகளாக, ஸ்திரமான, வலுவான அரசின் சாதனைகளை நாட்டு மக்கள் காண்பதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- உயர்கல்வி நிறுவனங்களுக்கான QS உலக தரவரிசைப் பட்டியலில், இந்தியா சிறப்பான இடம் பெற்று வருவது மிகவும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்து இருப்பதாகவும், பிரதமர் கூறியுள்ளார்.
- 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 89 தொகுதிகளில் வரும் 26 ஆம் தேதி நடைபெற உள்ள 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், நாளையுடன் முடிவுக்கு வருகிறது.
- இன்றும், நாளையும், வட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் வெப்ப அலை வீசக் கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மோடி 1 (17)

கடந்த 10 ஆண்டுகளாக, ஸ்திரமான, வலுவான அரசின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகளை நாட்டு மக்கள் பார்த்து வருவதாக பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். 2 ஆம் கட்ட மக்களவை தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இன்று ராஜஸ்தான் மாநிலம் சவாய் மாதோபூர் தொகுதியில் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், யாரும் கற்பனை கூட செய்திராத பல முக்கிய முடிவுகளை, கடந்த 10 ஆண்டுகளில் நாடு மேற்கொண்டதாக கூறினார்.

ஓட்டு வங்கி அரசியல் மற்றும் குறிப்பிட்ட பிரிவினரை திருப்திப்படுத்தும் அரசியல் தான் காங்கிரஸ் கட்சியின் அரசியல் என்று, திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். வளர்ச்சி அரசியலை காங்கிரஸ் ஒரு போதும் பின்பற்றியது இல்லை என்றும், நீண்ட காலமாக அடிப்படை வசதிகள் கூட மக்களுக்கு கிடைக்காமல் போனதற்கு, இதுவே காரணம் என்றும் அவர் கூறினார்.

காங்கிரஸ் ஆட்சியின் போது, எஸ்சி-எஸ்டி பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டை குறைக்கவும், மத அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கவும், 2004 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார். ஆந்திரபிரதேஷ் மற்றும் கர்நாடத்தில்,

மோடி2 (8)

இட ஒதுக்கீட்டை மத அடிப்படையில் பகுக்கும் சதியில் காங்கிரஸ் ஈடுபட்டதாகவும், இது அரசியல் சாசனத்தின் உணர்வுகளுக்கு முற்றிலும் எதிரானது என்றும் அவர் கூறினார். எஸ்சி-எஸ்டி மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கான இடஒதுக்கீடு ஒருபோதும் நீக்கப்பட மாட்டாது என்றும், அவர் உறுதி அளித்தார்.

தொடர்ந்து சத்தீஸ்கர் மாநிலம் ஜாஞ்கீர்-சாம்ப்பா மற்றும் மகாசமுந்த் மக்களவை தொகுதிகளில், பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். நாளை சூர்குஜா மக்களவை தொகுதியில் அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

**உயர்கல்வி** (18)

உலக அளவிலான உயர்கல்வி நிறுவனங்களின் QS தரவரிசைப் பட்டியலில், இந்திய உயர் கல்வி நிறுவனங்கள் சிறப்பான இடம் பெற்று வருவது மிகவும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். கல்வியின் தரத்தை மேம்படுத்த தற்போது இந்தியாவில் வழங்கப்படும் முக்கியத்துவம், இளைஞர் சக்திக்கு உதவும் வகையில், எதிர்காலத்தில் இன்னும் ஆழமாக்கப்படும் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமையாக்கப் பணிகளில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். உயர் கல்வி நிறுவனங்களுக்கான QS தர மதிப்பீட்டு நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு நன்சியோ காக்கரேலி, முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். அனைத்து ஜி-20 நாடுகளுக்கு இடையில் இவ்வாண்டு இந்தியா தான், உயர்கல்வித் துறையில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு உள்ளதாகவும், உலகின் முக்கிய ஆராய்ச்சி கேந்திரங்களில் ஒன்றாக இந்தியா மேம்பட்டு உள்ளதாகவும் திரு காக்கரேலி தெரிவித்தார். உலக பல்கலைக் கழகங்களுக்கான, பாடவாரியான QS தரவரிசை பட்டியலின் சில விவரங்கள் அடுத்த சில வாரங்களில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**அனுமன் ஜெயந்தி** (6)

இன்று அனுமன் ஜெயந்தி திருநாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். வாயு புத்திரர் அனுமான், ராமபக்தர்கள் அனைவருக்கும், எப்போதும், மிகுந்த உணர்வூக்கமாகத் திகழ்வார் என்றும், ஆஞ்சநேயரின் ஆசிகளால் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான நாட்டு மக்களின் மன உறுதிக்கு புதிய ஆற்றல் கிடைக்கும் என்றும் சமூக ஊடக செய்தியில் பிரதமர் கூறியுள்ளார்.

அமித் ஷா-டெல்லி (13)

மத்தியில் INDI கூட்டணி ஆட்சிக்கு வந்தால் குடியுரிமை திருத்தச் சட்டத்தை ரத்து செய்யும் என மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ப சிதம்பரம் கூறியிருப்பதை, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய உள் துறை அமைச்சருமான திரு அமித் ஷா கண்டித்துள்ளார். இன்று டெல்லியில் செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், குறிப்பிட்ட பிரிவினரை திருப்திப்படுத்துவதன் மூலம் தேர்தலில் வெற்றி பெறுவதே காங்கிரஸ் கட்சியின் நோக்கம் என்றார். அனைத்து பிரிவினருக்கும் நியாயம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதே, தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் குறிக்கோள் என்றும், குடியுரிமை திருத்தச் சட்டம் ஒரு போதும் நீக்கப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து நீதி வழங்குவதற்கான 3 புதிய குற்றவியல் சட்டங்கள், திட்டமிட்ட தேதியில் அமலுக்கு கொண்டு வரப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் மேலும் கூறினார்.

ராஜ்நாத் (13)

மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங், 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இன்று, உத்திரபிரதேஷ் மாநிலம் கவுதம்புத்தா நகர் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார். மாநிலத்தில் ஊழல் கேந்திரமான திகழ்ந்த நோய்டா பகுதி தற்போது முக்கிய வர்த்தக மையமாக மாறி இருப்பதாகவும், சட்டம்-ஒழுங்கு, நல்லாட்சி, வளர்ச்சி மற்றும் முதலீடுகளுக்கு பெயர் பெற்றதாக உத்திரபிரதேஷ் மாநிலம் மேம்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதற்கிடையே, முதலமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான யோகி ஆதித்யநாத், இன்று மேற்கு உத்திரபிரதேசத்தின் அம்ரோகா மாவட்டத்தில் சாலை பவனி நடத்தினார். இன்று மாலை மீரட் பகுதியிலும், அவர் சாலைபவனி நடத்துகிறார். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு அகிலேஷ்

யாதவ், பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் செல்வி மாயாவதி ஆகியோரும் இன்று மீரட் பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

<u>அமித் ஷா (8)</u>

மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா, 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான, தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இன்று மாலை பெங்களூரில், சாலை பவனி நடத்துகிறார். காங்கிரஸ் பொது செயலர் திருமதி பிரியங்கா வாத்ரா, இன்று கர்நாடகத்தில், சித்ரதுர்கா, பெங்களூர் ஆகிய இரண்டு இடங்களில் பிரச்சார பொதுக் கூட்டங்களில் உரையாற்றுகிறார். மத்திய அமைச்சர் திரு அமித் ஷா நாளை கேரளத்தில் ஆலப்புழா மற்றும் இடுக்கி பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

<u>இரண்டாம் கட்டம் (9)</u>

கேரளா-கர்நாடகா உட்பட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 89 தொகுதிகளில் வரும் 26 ஆம் தேதி நடைபெற உள்ள 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், நாளை மாலையுடன் முடிவுக்கு வருகிறது. இந்த இரண்டாம் கட்ட தேர்தலில் ஆயிரத்தி 200 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் உள்ளனர். இதற்கிடையே, 10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் அடுத்த மாதம் 13 ஆம் தேதி நடைபெற உள்ள 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நாளை மறுநாளுடன் முடிவடைய உள்ளது.

வானிலை 1(15)

இன்றும், நாளையும், வட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக் கூடும் என்றும், அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட, 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் 39 முதல் 42 டிகிரி செல்சியஸ் வரையிலும், இதர மாவட்டங்களின் சமவெளி பகுதிகள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், 35 முதல் 38 டிகிரி செல்சியஸ் வரையிலும் வெப்ப நிலை பதிவாகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 27 ஆம் தேதி வரை வெப்பநிலை இயல்பை விட அதிகமாகவே நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் போது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக ஈரோட்டில் 43 டிகிரி செல்சியஸ் பதிவாகி உள்ளது. கடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வெப்பநிலை, 35 முதல் 39 டிகிரி செல்சியசாக இருந்தது.

வானிலை 2 (5)

இன்று வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில், குமரிக்கடல் பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தென் தமிழகத்திலும், வடதமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் இன்றும் நாளையும் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அழகர் (10)

மதுரையில், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவம் இன்று காலை வெகு விமர்சையாக நடைபெற்றது. பச்சை பட்டுடுத்தி, வைகையில் இறங்கிய அழகரை, லட்சக்கணக்கிலான மக்கள் பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர். இன்று சித்ரா பௌர்ணமியை ஒட்டி காஞ்சிபுரம் சித்ரகுப்தர் கோவிலில், அதிகாலை முதலே சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தர்மபுரி அதியமான கோட்டத்தில் உள்ள அதியமான்-ஔவையார் சிலைகளுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி சாந்தி, அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

புத்தக தினம் (5)

உலக புத்தக தினமான இன்று, புத்தக வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அறிவுசார் சொத்துக்களான புத்தகங்களை பாதுகாக்கும் வகையிலும், புத்தக வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும், 1995 முதல் ஆண்டு தோறும் ஏப்ரல் 23 ஆம் தேதி, உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகிறது.

சோதனை (9)

கேரளத்தில் பறவைக் காய்ச்சல் இருப்பதாக தகவல் வெளியானதை தொடர்ந்து தமிழக அரசு, கேரள-தமிழக எல்லைப் பகுதியில் சோதனைகளை தீவிரப்படுத்தி உள்ளது. கேரளத்தில் இருந்து கோழிகள் மற்றும் தீவனங்களை ஏற்றி வரும் வாகனங்கள், முழுமையான சோதனைக்கு பின்னரே தமிழகத்திற்குள் அனுமதிக்கப்படுவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கென, எல்லைப் பகுதிகளில் 12

சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தென்காசி புளியரை சோதனைச் சாவடியில், தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் திரு கமல்கிஷோர் இன்று நேரடியாக ஆய்வு செய்தார்.

<u>*ஆதார்* (7)</u>

வங்கி வாடிக்கையாளர்கள் ஆதார் எண் மூலமான பண பரிவர்த்தனை வசதியை குறைந்தபட்சம் மாதம் ஒரு முறையேனும் பயன்படுத்த வேண்டும் என ரிசர்வ் வங்கி உத்தரவு எதையும் வெளியிடவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. அவ்வாறு செய்யத் தவறும் வாடிக்கையாளர்களுக்கு ஆதார் எண் மூலமான பண பரிவர்த்தனை வசதி நிறுத்தப்படும் என்பதும் உண்மையல்ல என்று பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை சரிபார்ப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

<u>*விமானப்பயணம்* (6)</u>

விமானப் பயணத்தின் போது, 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு, பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் சேர்த்தே இருக்கை ஒதுக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம், விமான சேவை நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி உள்ளது. அவ்வாறு ஒதுக்கப்படாமல் போனது குறித்து பலமுறை தங்களுக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும், இயக்குநரகம், அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

ஐபிஎல் (6)

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில், சென்னை-லக்னோ அணிகள் மோத உள்ளன. புள்ளிப் பட்டியலில் தற்போது சென்னை அணி 4 ஆவது இடத்திலும், லக்னோ அணி 5 ஆவது இடத்திலும் உள்ளன. இதற்கிடையே, நேற்று இரவு, மும்பை-ராஜஸ்தான் அணிகளுக்கு இடையே, ஜெய்பூரில் நடைபெற்ற போட்டியில், ராஜஸ்தான் அணி, 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.